1998 மே 5]

மருத்துவமனையாகத் தரம் உயரத்தித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லம் ஒன்றியம், ஓலக்கூர் கால்நடை கிளை நிலையத்திற்குப் பார்வைக் கிளை நிலையமாக, ஆனத்தூர் கிளை நிலையம் செயல்பட தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 437, திரு. ஜி. பி. வெங்கிடு, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**437—**

**தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்**

***4252—திரு. ஜி. பி. வெங்கிடு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையம் தொகுதி, பி. மேட்டுப்பாளையம் பேரூராட்சியில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள், தற்போது இடிந்து விழும் நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது பேரூராட்சிகளுக்கு ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மீண்டும் பேரூராட்சிகளுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமேயானால், புதிய வீடுகளாக அங்கு கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய கோபிசெட்டிப்பாளையம் தொகுதி, பி. மேட்டுப்பாளையம் பேரூராட்சியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் அடித்தளம் வலுவிழந்துவிட்ட காரணத்தால், சுவர்கள் இடிந்து மேல் கூரையும் தகர்ந்து போய்விட்டது. அந்த வீடுகளில் குடியிருந்த மக்கள் தற்போது பக்கத்திலேயே ஓலைக் குடிசைகளைப் போட்டுக் கொண்டு குடியிருந்து வருகிறார்கள். அருள்கூர்ந்து அவர்களுக்கு, 'குடிசை மாற்று வாரியத்தின் 100 பேரூராட்சிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கிற திட்டத்தின்', அடிப்படையிலாவது புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. மேட்டுப்பாளையத்தில் உள்ள குறிப்பிட்ட வீடுகள் முற்றிலும் பழுதடைந்திருக்கின்றன. அந்த வீடுகளை முழுவதுமாக இடித்துவிட்டு புதிதாகக் கட்டவேண்டும். பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு இதுபோன்ற தொகுப்பு வீடுகள் கட்ட இத்திட்டத்தின்கீழ் பணம் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் இருப்பதால், குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலமாக அதற்குரிய சாத்தியக்கூறுகள் இருந்தால், ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 438, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**438—**

### குற்றாலத்தில் குறவஞ்சிப் பாடல்

***6374—திரு. என்.ஆர். அழகர்ராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படிக்கும் வகையில் ஆங்காங்கே குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களை எழுதிவைக்க சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS